# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ. 145/2017

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**வா/சா/1 ஜேம்ஸ் பீட்டர்**

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனது பெயரில் எனது தந்தை எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சர்வே எண் 192/3, 192/4 ல் அடங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். இந்த சொத்துக்களை 21.06.1982ல் அன்னப்பூரணியம்மாள் சரசா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தாக வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பத்திரம் ஏற்பட்டதாகவும் அதில் 4 எல்லைகள் குறிப்பிடவில்லை என்றும் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களை சரசா 1,2 பிரதிவாதிகளுக்கும் கிரையம் கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால் வழக்குறையை படித்தால்தான் எனக்கு தெரியும். 1,2 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண் 49/2006 ல் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு எனது தகப்பானருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்த போது எனது தகப்பனார் இறந்துவிட்டார். எனது தாயாரும் மற்ற வாரிசுகளும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு எனது மூதாதையர் பெயரில் ஆவணங்கள் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகளுக்கு 192/1, 192/2 பாத்தியப்பட்டது. 192/3,192/4 எனக்கு பாத்தியப்பட்டது.

2. சர்வே எண் 192/1, 192/2 க்கு உரிமை ஆவணங்களை நான் பார்க்கவில்லை. அதே சர்வே எண்ணிற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த இரண்டு சொத்துக்களும் அமீனாபீக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வில்லங்கச் சான்றிதழில் சர்வே எண் 192/3,

192/4 அன்னபூரணியம்மாள் வகையரா சரசாவிற்கு கிரையம் செய்த பத்திரமும் பிறகு சரசா 1,2 பிரதிவாதிகளுக்கு செய்து கொடுத்த கிரையப்பத்திரம் வருகிறது என்றால் எனக்கு தெரியாது. அந்த இரண்டு பத்திரங்களும் இதுநாள்வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாகள் தாக்கல் செய்த வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கு முடிந்த பிறகு பிரதிவாதிகளுக்கு எதிராக திருவெற்றியுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் 74/2016 ஐ நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிழை திருத்தல் பத்திரம் 2015 ல் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாமதமாகதான் தெரியும். அந்த வழக்கில் நான் பிழை திருத்தல் ஆவணத்தைப்பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் பிரகாரம் பிழைதிருத்தல் பத்திரம் செல்லாது. அந்த வழக்கில் பிழைத்திருத்தல் பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில்தான் அந்த பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் இரண்டு வழக்குகளிலும் கேட்டுள்ளேன். அந்த வழக்கில் இடைக்கால உறுத்துகட்டளை பரிகாரதம பெற்றுள்ளேன். அந்த உத்தரவின் பெயரில் மேல்முறையீடு இந்த வழக்கில் நடந்தது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கு காண்பிக்கப்பட்டது எனக்கு தெரியாது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி